**செய்தி வெளியீடு எண்: 838** **நாள்: 26.11.2019**

**<u>இன்று (26.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தினை தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி பகுதி வாழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கை, சுமார் 50 ஆண்டு காலக் கோரிக்கையான விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தொடங்க வேண்டுமென்பதனை ஏற்று, இன்றையதினம் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து கள்ளக்குறிச்சி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

‘‘**மாவட்டப் பிரிவினைகள், நிர்வாக வசதிகளை முன்னிட்டு ஏற்படுகின்றன என்றாலும், மாவட்டம் வளர்ந்தாக வேண்டும், கல்வி, தொழில் ஆகியவை சிறந்தோங்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் உருவாக்கப்படுகின்றன**’’ என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறினார்கள்.

ஒரு மாவட்டம் பிரிக்கப்படுகிறது என்றால், தமிழ்நாட்டின் வரைபடத்தில் சில கோடுகளை மாற்றி வரைவது அல்ல. மாறாக, நிர்வாக சீர்திருத்தத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி இருக்கிறது என்று பொருள். மக்களுக்குத் தொண்டு செய்யக்கூடிய ஓர் அரசு, அந்த மக்களிடம் நெருங்கிச் சென்று, அவர்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கை எடுக்கிறது என்று பொருள். ஒரு பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை அங்கீகரிப்பது என்பது, வெறும் வரவு செலவு கணக்கை மட்டுமே வைத்து தீர்மானிக்கக்கூடியது அல்ல. தங்களுக்கென ஒரு தனி அடையாளம் வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு தருவதாகும். அம்மக்களின் கருத்திற்கிணங்கவும், நிர்வாக வசதிகளுக்காகவும், அரசின் நலத்

திட்டங்கள் கடைக்கோடியிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் தான் புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் தான், மக்கள் குறைகளை எளிதாக நிவர்த்தி செய்வதற்கு வசதியாக **5** புதிய மாவட்டங்களை ஒரே ஆண்டில் தொடங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைச் சாரும். இதுவரை, ஒரே ஆண்டில் **5** மாவட்டங்கள் தொடங்கப்பட்ட வரலாறு கிடையாது. அந்த வரலாற்றைப் படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

இப்பகுதியிலுள்ள மக்களின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், விழுப்புரம் மாவட்டத்தின் தெற்கு–மேற்குப் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு புதிய மாவட்டமாக, இன்று தமிழ்நாட்டின் **34**வது மாவட்டமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உங்கள் முகமலர்ச்சியோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாசியோடு அம்மாவின் அரசால் தோற்றுவிக்கப்படுகிறது. இப்புதிய மாவட்டத்தின் மக்களுக்கு முதலில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலாற்றுக்கு வடக்கில் இருப்பது வட ஆற்காடு மாவட்டம் என்றும், தெற்கில் இருப்பது தென் ஆற்காடு மாவட்டம் என்றும் இருந்தது. **1993–**ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரித்து விழுப்புரம் மாவட்டம் உருவாக்கப்பட்டது. இன்று மாண்புமிகு அம்மாவின் அரசால் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து கள்ளக்குறிச்சி தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி புதிய மாவட்டமாக உருவாவதால், மாவட்டத்திற்கான அரசு அலுவலக வளாகம், மாவட்ட மருத்துவமனை, பல்வேறு துறைகளின் மாவட்ட அலுவலகங்கள் என ஒரு மாவட்டத்திற்கு உரிய அனைத்து வசதிகளையும் பெறும். இதனால், இது வரை மக்கள் தங்களது தேவையினை நிறைவேற்றிக் கொள்ள அரசு அலுவலகங்களுக்கு நீண்ட தூரம் பயணம் செய்யும் நேரம் குறைந்து, எளிதில் அரசு அலுவலகங்களை அணுக வழிவகை செய்யப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டமும், மக்களும் வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்ல இது ஏதுவாக இருக்கும்.

பழம் பெருமைகளைக் கொண்டது இம்மாவட்டம். உதாரணமாக, ஏறத்தாழ **2,000** ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கிடையே, தென்பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு நாடு அமைந்திருந்தது. மலைகள் அதிகம் கொண்டது என்பதால் மலையமா நாடு என்று அழைக்கப்பட்டது. அம்மலை நாடு பெண்ணையாற்றின் உதவியால் பல வளங்களும் பெற்று சிறந்திருந்தது. திருக்கோவிலூரை தலைநகரமாகக் கொண்ட அம்மலையமா நாட்டை காரி என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் முதலில் முள்ளூருக்கும், முள்ளூர் மலைக்கும் தலைவனாகி, பிறகு மலை நாட்டிற்கே அரசன் ஆனான். சிறந்த கல்விமானான காரி, ஊர்கள் தோறும் கல்விக் கூடங்கள் பல அமைத்தான். ஆண், பெண் பேதமின்றி மக்கள் கல்வியறிவு பெற ஏற்பாடு செய்தான். காரி, கல்வி மட்டுமன்றி, போர்ப் பயிற்சியிலும் வலிமை கொண்டவனாக விரும்பினான். வில், வேல் போன்ற படைக்கல பயிற்சிகளிலும் பங்கேற்று வலிமை உடையவனாக விளங்கினான். அதனால் மூவேந்தர்களும், தங்களுக்கு வேண்டிய பொழுதெல்லாம் அவனைப் படைக்குத் துணையாக அழைப்பர். காரி எப்பக்கமோ, அப்பக்கமே வெற்றி என்ற நிலையில் காரியின் போர்த்திறன் பெரிதும் போற்றப்பட்டது. கல்வி, வீரம் மட்டுமன்றி, நெஞ்சின் ஈரத்திலும் நிகரில்லாத வள்ளலாக காரி திகழ்ந்தான். போரில் செய்த உதவிகளின் பொருட்டு, மூவேந்தர்களும் அவனுக்கு பல பொருட்களை பரிசாக வழங்கினார்கள். அவ்வாறு பெற்ற செல்வத்தை ஒருபோதும் தன்னுடையதாகக் கொண்டதில்லை காரி. அனைத்தும் பிறருடையது என்ற எண்ணம் கொண்டிருந்தான். அத்தகைய சிறப்பு வாய்ந்த காரி மன்னர் ஆட்சி செய்த ஊர் தான் திருக்கோவிலூர் ஆகும்.

அதே போல, சின்ன சேலம், தமிழ்நாட்டின் வட மாவட்டங்களையும், மேற்கு மாவட்டங்களையும் இணைக்கும் பிரதான நகரமாக உள்ளது. இந்த சின்ன சேலம் பேரூராட்சியில் பல நவீன அரிசி ஆலைகள் உள்ளன. மேலும், இப்பேரூராட்சிப் பகுதியில் அதிக அளவு நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளதால், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களுக்கு நெல் அறுவடை இயந்திரங்கள் இப்பகுதியில் இருந்து தான் செல்கின்றன.

இம்மாவட்டத்தின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- புதிய கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைநகராக கள்ளக்குறிச்சி நகராட்சி விளங்கும்.

- கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் மக்கள் தொகை 13,70,281 .

- மாவட்டத்தின் பரப்பளவு 3,520.37 சதுர கிலோ மீட்டர்.

- கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூரில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் இயங்கும்.

- மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்ன சேலம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கல்வராயன் மலை ஆகிய 6 வட்டங்களும், 23 உள் வட்டங்களும், 558 வருவாய் கிராமங்களும் அமைந்துள்ளன.

- இம்மாவட்டத்தில் திருக்கோவிலூர் (பகுதி), கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை (பகுதி), ரிஷிவந்தியம் என 5 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கியுள்ளன.

- கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் உட்பட 9 ஊராட்சி ஒன்றியங்களும், சின்ன சேலம், சங்கராபுரம் உட்பட 7 பேரூராட்சிகளும், 406 கிராம ஊராட்சிகளும் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் கல்வராயன் மலையானது கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் ஒரு பகுதியாகும். மேலும், பச்சைமலை, ஜவ்வாது மற்றும் சேர்வராயன் மலைகள் ஆகியவற்றுடன், இவை காவேரி ஆற்று வடிநிலத்தை பாலாற்றின் வடிநிலத்திலிருந்து பிரிக்கும் எல்லைகளாக அமைந்துள்ளன. கல்வராயன் மலையின் வட பகுதி சின்ன கல்வராயன் மலை என்றும், தென் பகுதி பெரிய கல்வராயன் மலை என்றும் அழைக்கப்படுகிறது. மணியாறு மற்றும் முக்தா ஆறு இணையும் இடத்தில் மணிமுக்தா அணை கட்டப்பட்டுள்ளது. இம்மலையில்தான் கோமுகி நதி உற்பத்தியாகி, அந்நதியின் குறுக்கே கோமுகி அணை கட்டப்பட்டுள்ளது. கோமுகி அணையைச் சுற்றி 15 ஏக்கர் நிலப்பரப்பில் அழகிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் நீராட மேகம், பெரியார் மற்றும் புண்ணிம்பாடி போன்ற அருவிகள் உள்ளன. மலையில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டு, படகு குழாம் உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்று சுற்றுலாப் பயணிகளை கவரும் பல்வேறு அம்சங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன.

இம்மாவட்டத்தில் மணிமுக்தா மற்றும் கோமுகி அணைகளின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 16,300 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன. இதில் நெல் மற்றும் கரும்பு,

கடலை, எள் மற்றும் காய்கறிகள் போன்ற பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதனால் இம்மாவட்டத்தில் கோமுகி சர்க்கரை ஆலை, மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை, தியாகதுருகம் சர்க்கரை ஆலை என பல சர்க்கரை ஆலைகளும், நவீன அரிசி ஆலைகள் போன்ற பல தொழிற்சாலைகளும் நிறைந்துள்ளன. மேலும், இங்கே அரசின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலும், புதிய காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மலையோர கிராமங்களிலும் சுவை மிக்க விளாம் பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இது போன்ற எண்ணற்ற இயற்கை வளங்களைக் கொண்ட இந்த மலைப்பகுதிகளை, வருங்காலங்களில், தேவைகளுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மலைவாழ் மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளனர். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மாவின் அரசும் மலைவாழ் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்து நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- கல்வராயன் மலையில் வாழும் பழங்குடியின மக்களுக்கான திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த ஒரு திட்ட அலுவலரும், அலுவலகமும் 2017ல் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் மலைவாழ் மக்களுக்கான திட்டங்கள் விரைந்து சென்றடைவது உறுதி செய்யப்பட்டது.

- பி.எட்., மற்றும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த பழங்குடியின இளைஞர்களைக் கொண்டு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, அவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இம்மாவட்ட பழங்குடியின மக்கள் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கு கொள்ள ஏதுவாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று வெள்ளிமலையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய கள்ளக்குறிச்சி மாவட்டம் தோற்றுவிக்கப்படுவதன் மூலம், மலைவாழ் மக்கள் வாழுகின்ற மலைப் பிரதேசமான கல்வராயன் மலையை உள்ளடக்கிய ஒரு புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும். அது மட்டுமல்லாமல், சுகாதாரத் துறை மூலமாக, கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாய் சேய் நலப் பிரிவு அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் பல்வேறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கடந்த 2011 முதல் 2018 வரை 1,074 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 12 பாலப் பணிகள் 671 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. என்றைக்கும் இல்லாத அளவில் இந்தப் பகுதியில் 12 பாலங்கள். அதுமட்டுமல்லாமல், 1,074 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்படுகிறது என்று சொன்னால் எந்தளவிற்கு திறமையுள்ள அரசு அம்மாவின் அரசு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தற்போது நடப்பாண்டில், 403 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 4 பாலப் பணிகள், 528 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதி மக்கள் வைத்த கோரிக்கையான சாலைகள் மேம்பாடு, புதிய பாலங்கள் போன்றவை அம்மாவினுடைய அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 60,92,071 தாய்மார்களுக்கு 5 ஆயிரத்து 265 கோடியே 46 லட்சம் ரூபாய் மகப்பேறு நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்

காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 31,57,462 பயனாளிகளுக்கு 5 ஆயிரத்து 767 கோடியே 27 லட்சம் ரூபாய் மருத்துவ நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவித் திட்டத்தின் கீழ், 12,36,871 பயனாளிகளுக்கு 1,752 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான 5,988 கிலோ தங்கமும், நிதியுதவியாக 4 ஆயிரத்து 315 கோடியே 83 லட்சம் ரூபாய் நிதியும் என மொத்தம் 6 ஆயிரத்து 68 கோடியே 37 லட்சம் ரூபாய் நிதியுதவியும், தாலிக்கு தங்கமும் அம்மாவினுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளன.

இதையெல்லாம் எதற்காக குறிப்பிட விரும்புகிறேன் என்று சொன்னால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சித் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும் இந்த ஆட்சியில் நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் பெறவில்லை என்ற ஒரு தவறான, பொய்யான குற்றச்சாட்டை செல்கின்ற இடங்களிலெல்லாம் பேசி வருகின்றார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கும்பொழுதும் சரி, அம்மாவின் மறைவிற்குப் பிறகும் அம்மாவினுடைய திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மக்களுக்குக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை புள்ளிவிவரங்களுடன் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 333 கோடியே ஒரு லட்சம் ரூபாய் செலவில் 90,675 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மலைப் பகுதியில் உள்ள மக்கள் அதிக அளவிலான கறவை மாடுகளைக் கோரியிருந்தனர். அதன் அடிப்படையில், அதிக அளவிலான கறவை மாடுகள் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 343 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவில் 10,41,164 பயனாளிகளுக்கு 41 லட்சத்து 64 ஆயிரத்து 656 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. உபதொழிலாகத் திகழ்கின்ற கால்நடை வளர்ப்பு செய்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகளின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு

அம்மா கொண்டு வந்த திட்டத்தை நாங்கள் முழுமையாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கிராமப்புறத்தில் இருக்கின்ற பெண்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக கோழி வளர்ப்புத் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். அதன் வாயிலாக **2,40,000** மகளிருக்கு தலா **25** நாட்டுக் கோழிகளைக் கொடுத்திருக்கின்றோம். கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவி செய்தால் அவர்கள் பொருளாதார மேம்பாடு அடைய முடியும் என்று ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை துவக்கி வைத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். **2018–19**ஆம் ஆண்டில் **1,50,000** நபர்களுக்கு வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் வழங்கி சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, இன்றைக்கு **15,000** நபர்களுக்கு தலா ஒரு கறவை மாடு வழங்கி அந்த குடும்பத்தை வாழ வைத்த அரசு அம்மாவினுடைய அரசு. **2018–19** ஓராண்டில் மட்டும் ஏழை மகளிருக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக அம்மா கொண்டு வந்த இந்தத் திட்டத்தின் வாயிலாக, இந்த ஓராண்டில் மட்டும் **4,05,000** மகளிர் பயன்பெற்றிருக்கிறார்கள். திரு.ஸ்டாலின் அவர்களே போகும் பக்கமெல்லாம் குறிப்பிடுகின்றீர்களே, உங்களுடைய ஆட்சியில் என்ன செய்தீர்கள்? ஏழை மக்கள் முன்னுக்கு வரவேண்டும், இந்த நாடு வளர வேண்டுமென்று சொன்னால், பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்று சொன்னால், கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு எங்களது அரசு அம்மா வழியைப் பின்பற்றி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2016**–ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே, நான் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அம்மா மறைந்துவிட்டார்கள். ஆனால், அம்மா மறைந்தாலும், அம்மாவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை அம்மா அரசு நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில், **2017–18** மற்றும் **2018–19**ஆம் ஆண்டுகளில் **1,62,494** மகளிருக்கு இரு சக்கர வாகனம் வாங்க **389** கோடியே **54** லட்சம் ரூபாய் மானியம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் சிந்தாமல், சிதறாமல் மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பொதுப்பணித் துறையின் சார்பில் 12.27 கோடி ரூபாய் மதிப்பிலான 22 பணிகள் உட்பட 24 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 52 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறை சார்பில் 121 கோடி ரூபாய் மதிப்பிலான 164 பணிகள் உட்பட மொத்தம் 195 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 519 பணிகளுக்கு நான் இன்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டியுள்ளேன். இன்று 5,873 பயனாளிகளுக்கு 23.59 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது கள்ளக்குறிச்சி மாவட்ட தொடக்க விழா மட்டுமல்லாமல், இந்தப் பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாகவும் இருந்து கொண்டிருக்கிறது.

உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு கசிவுநீர் குட்டை அமைக்கும் பணி 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. சின்ன சேலம் வட்டம், கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை ஆற்றின் குறுக்கே சிறிய அணையும், பொட்டியம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும் அமைத்து கூடுதல் நீர்த்தேக்கம் ஏற்படுத்தப்பட உள்ளது. திருக்கோவிலூர் வட்டம், அன்றாயநல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள நீரை பயன்படுத்தி, கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

“**சொன்னதை செய்வோம், செய்வதைத் தான் நாங்கள் சொல்வோம்**” என்ற மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த நாங்கள், செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி மட்டுமே மக்களிடம் எடுத்துரைத்து நிறைவேற்றுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பறம்பு மலை பாரிக்கு இணையான பரங்கிமலை பாரியான மாண்புமிகு புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்

திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது அம்மாவினுடைய அரசு. இது மகத்தான அரசு என அனைத்து தரப்பு மக்களால் பாராட்டப்படுகின்றது என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

"**மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்**" என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்பாட்டில் உள்ள நாங்கள், சொன்னதைச் செய்வோம், செய்வதைத் தான் சொல்வோம். அவ்வாறு சட்டமன்றத்தில் நான் அறிவித்த அறிவிப்புகளுக்கு இணங்க, தற்போது இந்தப் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களின் பிரதான தொழில் விவசாயம். இரண்டு மாவட்ட மக்களும் பயன் பெறுகின்ற வகையில் அம்மாவின் அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மாவின் அரசால் திண்டிவனம் அருகே பிரம்மாண்டமான உணவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்படவுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்களை நியாயமான விலையில் உணவுப் பூங்காவில் விற்பதன் மூலம் நல்ல இலாபம் கிடைக்கும். தமிழ்நாட்டில், மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களும் உணவுப் பூங்காவில் ஆன்–லைன் மூலம் பெறப்பட்டு, அதற்குண்டான தொகை விவசாயிகளுக்கு அவர்களுடைய மாவட்டத்திலேயே வழங்கப்படும். ஏறக்குறைய 10 மாவட்டங்களில் இந்த உணவுப் பூங்கா அமைக்கத் திட்டமிட்டு, நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

குடிமராமத்துத் திட்டம் அம்மா அரசின் பிரதானத் திட்டம். நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக 2016–17ஆம் ஆண்டு குடிமராமத்துத் திட்டம் தொடங்கப்பட்டு 2017–18, 2018–19 என ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவில் ஏரிகளை தேர்ந்தெடுத்து முழுக்க, முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால், தற்பொழுது, பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீர், ஒரு சொட்டுகூட வீணாகாமல் ஏரிகள், குளங்கள், குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நிலையைக் காண முடிகிறது. மேலும், இதனால் கிடைக்கும் வண்டல் மண்ணை, விவசாயிகள் அதிகாரிகளிடம்

சான்றிதழ் பெற்று இலவசமாக எடுத்துச் சென்று தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு முன்பு ஒரு டிராக்டர் மண்கூட உங்களால் எடுத்துச் செல்ல முடியாது என்று இருந்த நிலையை மாற்றி, இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை விவசாயிகளுக்கு அர்ப்பணித்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

மேலும், மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான நீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக, மூன்றாண்டு காலத் திட்டமாக ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இந்த இரண்டாண்டுகளில் ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் நதிகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வேளாண் பெருமக்களுக்குத் தேவையான புதிய, புதிய திட்டங்களை அம்மாவின் அரசு தான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அம்மாவின் அரசு வேளாண் பெருமக்களின் அரசு, விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசு என்பதை நாங்கள் செயல்களில் காண்பித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூபாய் 9,163 கோடி வட்டியில்லா பயிர்க் கடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அம்மாவின் அரசு ஓராண்டில் மட்டும் ரூபாய் 10 ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கியுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர், பவர் டிரில்லர், போன்றவற்றை மானிய விலையில், வழங்குகின்றோம். சொட்டு நீர் பாசனக் கருவி வாங்குவதற்கு, ஒரு ஹக்டேர் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், ஒரு ஹக்டேருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கி வருகின்ற அரசு அம்மாவின் அரசு. இந்த அரசு, திட்டங்களை அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அதனை நடைமுறைப்படுத்துகின்ற அரசு. விவசாயிகள், சூரிய சக்தி மூலமாக இயங்கும் மின் மோட்டார் வாங்குவதற்கு மானியம் வழங்கிய அரசு அம்மாவின் அரசு.

கடந்த வருடம் அமெரிக்கன் படைப் புழு தாக்கியதால் மக்காச்சோளப் பயிர்கள் வீணாகி, அதனை பயிர் செய்த விவசாயிகள் வருமானம் இழந்து கடுமையாக பாதிப்படைந்ததற்கு ரூபாய் 182 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கிய அரசு அம்மாவின் அரசு. இந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் மக்காச்சோளம் பயிர் செய்துள்ள நிலங்களில் உள்ள அமெரிக்கன் படைப் புழு தாக்குதலைத் தடுப்பதற்காக, ரூபாய் 49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான மருந்து தெளிக்கப்பட்டது.

இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேனென்றால், இப்பொழுது இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எதையும் படிக்கவும் மாட்டார், எதுவும் தெரியவும் தெரியாது. போகும் இடத்திலெல்லாம் பொய்யாகப் பேசுவார், என்னைப் புளுகு என்று சொல்கிறார். நாங்கள் செய்த சாதனைகளை புள்ளிவிவரத்துடன் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் புளுகவில்லை, பொய் சொல்லவில்லை. பொய் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது. நாங்கள் உண்மையைப் பேசுகின்றோம், உண்மையாக செயல்படுகின்றோம். மக்களுக்கு என்ன தேவையென்று அறிந்து நடவடிக்கை எடுக்கின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நாங்கள் நடைமுறையில் சாதித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டமும், சேலம் மாவட்டமும் இணைகின்ற இடத்தில் பால்வளம் மற்றும் மீன்வளம் நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளடங்கிய உலகத்தரம் வாய்ந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நவீன கால்நடைப் பூங்கா 1,866 ஏக்கரில் உருவாக்கவிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் உள்கட்டமைப்பு வசதிக்காக மட்டும் ரூபாய் 1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதில், முதற்கட்டமாக ரூபாய் 396 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இவ்வளாகத்தில் முதற்கட்டமாக கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ளது. விவசாயிகள் வளர்க்கின்ற பசு அதிகளவில் பால் கொடுக்கும் வகையில், அதாவது 10 லிட்டர் பால் கொடுக்கும் பசு 25 லிட்டர் பால் கொடுக்கும் வகையில், இந்த ஆராய்ச்சி நிலையம் மூலமாக ஆய்வு செய்து, நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு விவசாயிகளுக்கு கலப்பினப் பசுக்களை உருவாக்கித் தருவதுதான் எங்களுடைய லட்சியம். அதற்குத்தான் முதற்கட்டமாக ரூபாய் 82 கோடி ஒதுக்கி, இந்தக் கல்லூரி

கட்டுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். கால்நடைகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். தொழில் முனைவோர்களுக்கு கால்நடை வளர்ப்பு குறித்து பயிற்சி வகுப்புகள், கால்நடைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும். உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து கால்நடை பராமரிப்பு மற்றும் விலங்கின அறிவியல் தொழில்நுட்பங்கள், உயர்தர ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இந்த கால்நடை பூங்காவில், வாகன நிறுத்த இட வசதி, குழந்தைகள் பூங்கா, கண்காட்சியகம், வண்ண மீன் கண்காட்சியகம் மற்றும் விற்பனைக் கூடம், உணவகம் போன்ற வசதிகளும், கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், பால் பொருட்கள், முட்டை, மீன், இறைச்சி விற்பனை வளாகங்களும் அமைக்கப்படும். இந்தத் திட்டம் விரைவாக தொடங்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுமா ? என்ற ஐயத்தை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றார். மாநிலத் தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1996–ஆம் ஆண்டு வரை மேயர் பதவிக்கு மறைமுகத் தேர்தல்தான் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது திரு.ஸ்டாலின் முதன்முதலாக நேரடித் தேர்தலைச் சந்தித்தார் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார். அதற்குப் பிறகு 2006–ஆம் ஆண்டு நேரடியாக நடைபெற்ற தேர்தலை மறைமுகத் தேர்தலாக அறிவித்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் தான். அவரே மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக, தெளிவாக சட்டமன்றத்தில் பதிலளித்திருக்கிறார். இப்பொழுது ஏன் மறைமுகத் தேர்தலை சந்திக்கத் தயங்குகிறார் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்கள் தானே பேரூராட்சித் தலைவர்களையும், நகர்மன்றத் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது ? அவர்கள் கொண்டு வந்தால் சரி என்றும், நாங்கள் கொண்டு வந்தால் தவறு என்று சொல்கிறார். இதில் எந்தவிதத்தில் தவறு இருக்கிறது. அவ்வாறு தவறு என்று சொன்னால், உங்களால் 2006–ஆம் ஆண்டு கொண்டு வந்ததும் தவறா ?

இதுபோன்ற தவறான திட்டத்தைத்தான் நடைமுறைப்படுத்தினீர்களா? அது சரியென்றால், இதுவும் சரியென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இம்மாவட்ட மக்களின் நலனைக் கருதி, சில புதிய அறிவிப்புகளை மங்களகரமான இந்தத் திருநாளில் இங்கே வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

- கள்ளக்குறிச்சி நகரத்திற்கு 23 கி.மீ. நீள சுற்றுவட்டச் சாலை அமைக்க விரிவானதிட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இந்த நகரத்திலுள்ள போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக சுற்று வட்டச் சாலை அமைக்க அரசு நடவடிகை எடுக்கும்.

- உளுந்தூர்பேட்டை வட்ட மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- ரிஷிவந்தியத்தில் அரசு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். புதிய கல்லூரி அங்கே உருவாக்கப்படும்.

- கள்ளக்குறிச்சி வட்டம், கொங்கராயப்பாளையம்–கண்டாச்சிமங்கலம் கிராமம் அருகே மணிமுக்தா ஆற்றில் 8 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓர் தடுப்பணை அமைக்கப்படும்.

- உளுந்தூர்பேட்டை வட்டம் கிழக்கு, மருதூர் கிராமம் அருகே கெடிலம் ஆற்றில் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைஅமைக்கப்படும்.

- சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமம் அருகே மணி நதியில் 2 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைஅமைக்கப்படும்.

- உளுந்தூர்பேட்டை வட்டம், கூ.கள்ளக்குறிச்சி கிராமம் அருகே நரியன் ஓடையில் 2 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும். இத்தடுப்பணைத் திட்டங்களினால் சுமார் 665 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

- உளுந்தூர்பேட்டை பேரூராட்சி 3.68 எம்.எல்.டி பாதாள சாக்கடைத் திட்டம், 38.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நான் வருகின்றபொழுது, தைப்பொங்கல் வரவிருப்பதால், இந்த ஆண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று பொதுமக்கள் என்னிடத்தில்

கேள்வி எழுப்பினார்கள். உங்களது கோரிக்கை அரசின் பரிசீலினையில் இருந்து கொண்டிருக்கிறது, அதுகுறித்த நல்ல அறிவிப்பை நான் இப்பொழுது செல்லும் விழாவில் அறிவிப்பேன் என்று கூறினேன். தைப்பொங்கல் பண்டிகை தமிழர்களின் தனிச் சிறப்புமிக்க பண்டிகை. **தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும். தமிழர் மரபையும், பாரம்பரியத்தையும் அடையாளப்படுத்தும் இவ்விழா, தமிழ் மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும். எனவே தான், சென்ற ஆண்டு, வறட்சியின் பாதிப்பு ஏழை மக்களை பாதிக்காத வண்ணம், பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அம்மாவின் அரசு, அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள அனைத்து குடும்பத்திற்கும் தலா ஆயிரம் ரூபாய் ரொக்கமும், பொங்கல் பரிசுத் தொகுப்பும் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளது. விவசாயிகள் தங்களிடம் உள்ள பணத்தை இடுபொருள்களுக்கும், பிற பணிகளுக்கும் செலவழித்துவிட்ட நிலையில், அவர்கள் போதிய வருவாய் இன்றி சிரமப்படும் ஏழைக் குடும்பங்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை இந்த ஆண்டும் சிறப்பாகக் கொண்டாட, சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் அரிசி அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும், குடும்பத்திற்குத் தலா 1000 ரூபாயுடன், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை அத்துடன் கரும்பு, முந்திரி, திராட்சை உட்பட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.**

இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆகவே, புதிதாக தொடங்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டம் உதயமாவதற்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**